3. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்திற்கேற்ப கட்சிகளுக்கு ஒதுக்கப்பெறும் நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்றைய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை பேரவைக்கு அறிவிக்கிறேன். கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரம்:—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—135 நிமிடங்கள், (அமைச்சரின் பதில் உட்பட). திராவிட முன்னேற்றக் கழகம்—45 நிமிடங்கள், காங்கிரஸ் (இ)—40 நிமிடங்கள், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்—கட்சி—15 நிமிடங்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி—15 நிமிடங்கள், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி, அகில இந்திய பார்வட் ப்ளாக் கட்சி, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி, மக்கள்கட்சி முஸ்லிம் லீக், குடியரசுக் கட்சி, ஆகிய கட்சிகளுக்கெல்லாம் சேர்ந்து 20 நிமிடங்கள், என நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, நேற்றைய தினம் போட்டிருந்த தீர்மானத்திற்கு மாறாக இப்போது தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இரண்டரை மணி நேரம் விவாதம் இருந்தால்தான் இந்த முறை என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இன்றுதான் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு 4½ மணி நேரம் விவாதம் நடக்கப் போகின்றதே. ஆகவே அந்த நேரங்களை அதிகமாக்கலாமே?

மாண்புகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம் பேராசிரியர் அவர்கள் பாதி நேரம் ஆளும் கட்சிக்கும், பாதி நேரம் எதிர்க் கட்சிகளுக்கும் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு முறையினை வகுத்து இப்போது நேரங்களை அறிவித்திருக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, நேற்றைய தினம் முடிவு எடுக்கின்றபோது இன்றைய தினம் 2½ மணி நேரம் தான் விவாதம் நடக்கப் போகின்றது என்று நினைத்திருந்தோம். ஆனால் இன்று 4½ மணி நேரம் விவாதம் நடக்கப் போகின்றதே. ஆகவே நேரத்தை அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டரை மணி நேரம் நடக்கும் என்ற வகையில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 7½ நிமிடம் தான் என்று ஒதுக்கி இருந்தோம். இன்றைக்கு 4½ மணி நேரம் விவாதம் நடக்க இருப்பதால்தான் அதற்குத் தகுந்தவாறு நேரத்தை ஒதுக்கி இருக்கிறோம். பாதி நேரம் எதிர்க

கட்சிகளுக்கும் பாதி நேரம் ஆளும் கட்சிக்கும் என்ற வகையிலே நேரத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்கதான் இவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, நேற்றைய தினம் 2½மணி நேரம்தான் என்ற வகையில் அந்த முடிவு எடுக்கப் பட்டது......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது விவாதத்தை ஆரம்பிக்கலாம். பிறகு வேண்டுமானால் ஓரளவு அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இன்றைய தினம் 4½ மணி நேரம் விவாதம் நடக்க இருப்பதால் எங்கள் கட்சிக் குரிய நேரத்தை அதிகமாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் பேசிக் கொண்டு வாருங்கள், பிறகு அட்ஜஸ்ட் பண்ண முடியுமா என்று பார்க் கிறேன்......(குறுக்கீடு).....நேற்றைய தினம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார்கள். அதைத்தான் அலுவல் ஆய்வுக் குழுவிலே மாற்றி அமைத்திருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, நேற்றைய தினம் அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதற்கு மாறாக...........

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அதிக நேரம் தாங்கள் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்று கேள்வி நேரத்தையே ஒத்தி வைத்து விட்டு விவாதத்தை 4½ மணி நேரத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைய தினம் அலுவல் ஆய்வுக் குழுவினை மீண்டும் கூட்டி நாம் முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

2. வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, பொது மருத்துவம், சுகாதாரம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரே பணையை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.